# பொதுக்காலத்தின் இருபதாம் ஞாயிறு

மூன்றாவது திருவழிபாடு ஆண்டு

**இன்றைய வாசகங்கள்:**

**எரேமியா 38: 4-6,8-10, எபிரேயர் 12:1-4, லூக்கா 12 :49-53**

## திருப்பலி முன்னுரை:

பிரிக்கப்பட்டவர்களே, பொதுக்காலத்தின் இருபதாம் ஞாயிறு திருப்பலியை சிறப்பிக்க உங்களை அன்போடு வரவேற்கிறோம். நம் ஆண்டவருக்கு உரியவர்களாக தனித்துவத்துடன் வாழ இன்றைய திருவழிபாடு நமக்கு அழைப்பு விடுக்கிறது. நாம் இந்த உலகிற்கு உரியவற்றில் இருந்து பிரிக்கப்பட்டு, விண்ணக வாழ்வுக்காக தேர்வு செய்யப்பட்டிருக்கிறோம் என்பதை முழுமையாக உணர அழைக்கப்படுகிறோம். கடவுளின் விருப்பப்படி, இவ்வுலகின் தீமைகளில் இருந்து விலகி வாழ இயேசு நமக்கு அழைப்பு விடுக்கிறார். அனைத்தையும் விட்டுவிட்டு ஆண்டவரைப் பின்தொடரவே நாம் கிறிஸ்தவ வாழ்வுக்கு அழைக்கப்பட்டிருக்கிறோம். நம் தலைவராகிய இயேசு இவ்வுலகில் மூட்ட வந்த தீயைப் பற்றியெரியச் செய்பவர்களாய் வாழும் வரம் வேண்டி, இத்திருப்பலியில் பங்கேற்போம்.

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

**1. நிறைவு அளிப்பவரே இறைவா,**

உமது பணிக்காக நீர் தேர்ந்தெடுத்துள்ள எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவ றத்தார் அனைவரும், நிறைவாழ்வை நோக்கிய பயணத்தில் உம் மக்களை மன உறுதி யுடன் வழிநடத்த தேவையான அருளைப் பொழியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

**2. நம்பிக்கை தருபவரே இறைவா,**

உலகில் போர் பதற்றம், வன்முறை, வேலையின்மை போன்ற பல்வேறு பிரச்சனை களால் நம்பிக்கை இழந்து தவிக்கும் இளையோர், உம் திருமகன் இயேசு வழியாக நம் பிக்கை நிறைந்த எதிர்காலத்தைக் காண உதவுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

**3. அருள்மழை பொழிபவரே இறைவா,**

இரண்டாயிரம் ஆண்டு காலமாக உமது மீட்பின் மறைபொருளை அறியாமலும், ஏற்றுக் கொள்ளாலும் வாழும் எம் நாட்டு மக்கள் உம்மை அறிந்து, ஏற்றுகொள்ளவும் உமது மீட்பைக் கண்டடையவும் துணைபுரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

**4. வாழ்வை வழங்குபவரே இறைவா,**

உலகெங்கும் உமது நற்செய்தியைப் புறக்கணிப்பவர்களால், கிறிஸ்தவ மக்களும் மறை போதகர்களும் அனுபவிக்கும் துன்பங்கள் நீங்கிட, மீட்பின் மறைபொருளை உலகோர் அனைவரும் புரிந்துகொள்ளச் செய்யுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

**5. மண்ணுலகில் அன்பு என்னும் தீயை மூட்டுகின்ற தந்தையே இறைவா!**

உலக நாடுகள் முழுவதிலும் பிளவுகளையும், பிரிவனைகளையும் ஏற்படுத்தி மக்களை அச்சுறுத்தும் எல்லாத் தீய சக்திகளையும் முறியடித்து அமைதியையும், நிறைவான சுதந்திர வாழ்வையும் அனைவருக்கும் பெற்றுக் கொடுத்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.